**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 24/2021</u>**
**<u>நாள் 03/09/2025 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – கிருபா | த/பெயர் – ராஜி |
| வயது – 51 | தொழில் – |
| விலாசம் – நாகலாபுரம், சத்தியவேடு வட்டம், சித்தூர் மாவட்டம், ஆந்திர மாநிலம் | |

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. விபத்து எந்த தேதியில் எங்கு நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆரணி பேருந்து நிறுத்தத்தில் இருந்து இடது பக்க ஓரமாக நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது மாலை சுமார் 05.00 மணியளவில் நடந்தது. எந்த வாகனம் மோதி எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் எனக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் வலது பக்க விலாஎலும்பு முறிந்துவிட்டது உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது.

2. எந்த மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றேன் என்றால் சென்னை ஸ்டேன்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். 3 மாதங்கள் அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டதா என்றால் வயிற்றில் 3 அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

விபத்து சம்மந்தமாக போலிசில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரிந்தவர்கள் கொடுத்தனர். விபத்து நடந்தபோது எனக்கு எவ்வளவு வயது என்றால் சுமார் 40 வயது இருக்கும், என்ன வேலை பார்த்தேன் என்றால் சித்தாள் வேலை பார்த்தேன். தினம் ஒன்றிற்கு ரூபாய் 1000/– சம்பாதித்து வந்தேன். விபத்து நடந்தபோது வேலை செய்து கொண்டிருந்தேனா என்றால் வேலை முடித்து விட்டு சொந்தவேலையாக வெளியே செல்லும்போது நடந்தது. என்னுடைய வீடு எங்கு உள்ளது என்றால் நாகலாபுரம் ஆந்திரா மாநிலத்தில் உள்ளது. விபத்து நடந்த இடம் ஆரணி ஆகும்.

3. என்னுடைய வயது, வருமானம், ஆகியவற்றை நிரூபிக்கும் வகையில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் மதுபோதையில் இருந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உாிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா ஆ 7 ஆவணம் வாகன ஆய்வு அறிக்கையில் ஓட்டுநர் உாிமம் இல்லை என குறிப்பிடபட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகபடியான நஷ்ட ஈடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நடைபாதை இல்லாத இடத்தில் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழுக்க முழுக்க என்னுடைய அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் விபத்து காரணமாக உடல் பாதிக்கபட்டுள்ளதால் தற்போது எந்த வேலையும் செய்ய இயலவில்லை.

4. விபத்து ஏற்படுத்தியதாக கூறும் இருசக்கர வாகனம் ஓட்டியவருக்கு தகுந்த ஓட்டுநர் உாிமம் இல்லை என்பதால் அது காப்பீட்டு விதிகளுக்கு முரனாக இருக்கும் காரணத்தினால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**